**2020ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள்**

**1.** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கும் பணிக்குத் தேவையான உதிரிபாகங்களின் விலை விபரப் பட்டியல் ரூ.184958/- க்கானது (CGST + SGST வரி உள்பட) அரசு நிறுவனமான டான்சி டூல்ஸ் அண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருச்சியிலிருந்து வரப் பெற்றுள்ளது.

| Sl,No | Description of Pump spares | Qty in Nos |
|---|---|---|
| 1 | Water Tank | 30 |
| 2 | Stand (T) | 25 |
| 3 | Handle Assembly | 15 |
| 4 | Third Plate (Gal) 4mm | 15 |
| 5 | Handle Axle (S.S) | 20 |
| 6 | M 12 x 40 Hex bolt | 500 |
| 7 | M 12 Hex Nut | 500 |

எனவே மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து உதிரி பாகங்கள் பெறுவதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 1841 / 2020/ இ 3)**

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம் பணியின் அவசர அவசியத்தினை கருதி தொடரப்படும் மேல் நடவடிக்கைகளுக்கும் டான்சி டூல்ஸ் அண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருச்சிக்கு வேலை உத்திரவு வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) 2019/2020 குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 1882 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**2.**திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் லாரி வாகனம் TN.57.A.2186 க்கு பேட்டரி சப்ளை செய்யும் பணிக்கு கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளன.

1) நித்யா பேட்டரி டிரேடர்ஸ் - ரூ.10600/-

2) ஜாபர் ஜெனரேட்டர்ஸ் - ரூ.14000/-

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியை அளித்துள்ள நித்யா பேட்டரி டிரேடர்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 876 / 2020/ இ 3)**

**<u>அ.குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவாக ரூ.10600/- க்கு விலைப்புள்ளி அளித்துள்ள நித்யா பேட்டரி டிரேடர்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 1883 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**3.**திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் லாரி வாகனம் TN.57.A.2782 க்கு புதிதாக 6 டயர்கள் சப்ளை செய்யும் பணிக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளன.

1) செந்தில் சர்வீஸ் ஸ்டேசன், திண்டுக்கல் - ரூ.100000/-

2) ராஜ் டயர்ஸ், திண்டுக்கல் - ரூ.104000/-

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள செந்தில் சர்வீஸ் ஸ்டேசன், நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 421 / 2020/ இ 3)**

**<u>அ.குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ரூ.100000/- க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள செந்தில் சர்வீஸ் ஸ்டேசன் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

பணியின் அவசர அவசியம் கருதி சப்ளை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 1884 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**4. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் செயல்பட்டு வரும் 18 வாகனங்களில் தற்போது 6 நிரந்தர ஓட்டுநர்கள் மற்றும் பணி மாற்று அடிப்படையில் 2 ஓட்டுநர்கள் மொத்தம் 8 ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள 10 வாகனங்களை இயக்குவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய நிர்ணய அளவுகோலின்படி**

ஒப்பந்தப்புள்ளி பெற்று ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக ஓட்டுநர்கள் நியமனம் செய்து மேற்கொள்ளப்பட்ட பணி கடந்த 31.03.2020 உடன் முடிவடைந்தது. எனவே 2019-20ன் தரவிலை அடிப்படையில் வரும் 01.04.2020 முதல் மேலும் 6 மாத காலத்திற்கு ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்ட தி/வா திரு. ராமலிங்கம் PWD காண்ட்ராக்டர், அய்யம்பாளையம் நிறுவனத்திடமிருந்து வெளி முகமை ஒப்பந்தம் மூலம் பணியாளர்களை விநியோகம் செய்யும் பணியை நீட்டிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 (ரூபாய் பத்து லட்சம்) இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.1320/2019/எச்1).

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 1885 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

5. திண்டுக்கல் மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள TN 57 AB 9241 ஜெட் ராடர் வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு 18.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட 2 ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | நிறுவனம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ விநாயகா ஆட்டோ மொபைல்ஸ்,<br>திருச்சி ரோடு, திண்டுக்கல் | ரூ. 39,000/- |
| 2 | குமார் ஆட்டோ கேர், ஜி.டி.என். ரோடு,<br>திண்டுக்கல் | ரூ. 36,750/- |

(ந.க.எண்.13426/2019/எச்1).

மேற்கண்டவாறு பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள குமார் ஆட்டோ கேர், ஜி.டி.என். ரோடு, திண்டுக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்து மாமன்ற அனுமதியை எதிர்நோக்கிய மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 1886 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

6. திண்டுக்கல் மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள TN 57 AF 4910 வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு 18.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட 2 ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | நிறுவனம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ விநாயகா ஆட்டோ மொபைல்ஸ், திருச்சி ரோடு, திண்டுக்கல் | ரூ. 25,950/- |
| 2 | குமார் ஆட்டோ கேர், ஜி.டி.என். ரோடு, திண்டுக்கல் | ரூ. 23,300/- |

**(ந.க.எண்.6203/2019/எச்1).**

மேற்கண்டவாறு பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள குமார் ஆட்டோ கேர், ஜி.டி.என். ரோடு, திண்டுக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்து மாமன்ற அனுமதியை எதிர்நோக்கிய மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 1887 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

7. திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான காந்திஜி மைதானம் தினசரி காய்கறி சந்தையில் மார்க்கெட் நுழைவுக் கட்டணம் தண்டும் உரிமத்தினை 2020-2023 ஆண்டுகள் ஒப்படைப்பு செய்ய 18.03.2020ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டவாறு 2 ஏலக்கேள்விகள் மட்டும் வரப்பெற்றன. (2020-23 ஏல அறிக்கை, நிபந்தனைகள் பொது கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுள்ளது.)

| வ.எண் | பெயர்/முகவரி | ஓர் ஆண்டின் ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு.வீ.இருளப்பன் த/பெ.வீரப்பத்திரன், 157, பெரியகோட்டை கிராமம், பிள்ளமநாயக்கன் பட்டி, திண்டுக்கல் | ரூ-74,10,000/- |

| | | |
|---|---|---|
| 2 | திரு.முருகன், த/பெ.ஆர்.சிவபெருமாள், 10, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல். | ரூ-74,00,000/- |

மேற்கண்ட ஏலக்கேள்வியின் வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள திரு.வீ.இருளப்பன் என்பவரது கேள்வியானது மூன்று ஆண்டு சராசரியை விட 8.73 சதவீதம் கூடுதலாக சென்ற ஆண்டு 5.52 சதவிகிதம் கூடுதலாகவும் உள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது. ந.க.எண்.10193/2014அ7

<u>அ.கு.</u>

திரு.வீ.இருளப்பன் என்பவரது ஏலக்கேள்வியானது மூன்று ஆண்டு சராசரியை விட 8.73 சதவிகிதம் கூடுதலாகவும், சென்ற ஆண்டை விட 5.52 சதவிகிதம் கூடுதலாகவும் உள்ளது. மாமன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண்: 1888 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

8. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8009/2016/ஜே-1 நாள் 04.11.2016 மற்றும் 28.06.2017ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரைகள், அரசு தலைமைச் செயலர், சென்னை அவர்களின் அனைத்து துறை கூட்ட அறிக்கை நாள் 14.03.2019, மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.141/2018/அ6 நாள் 05.04.2019 மற்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அரசு முதன்மைச் செயலர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரை நாள் 29.08.2019ன்படி, இம்மாநகராட்சி பகுதிகளில் கொசுவினால் பரவக்கூடிய நோய்களை தடுக்கும் பணிகளுக்கு 48 வார்டுகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 300 வீடுகளுக்கு 1 நபர் என்ற வீதத்தில் (இம்மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகையான 2,07,307க்கு (2011 சென்சஸ்) உட்பட்ட 53,573 குடியிருப்புகளுக்கு) 173 நபர்கள் தேவைப்படுவதால், 173 தற்காலிக மலேரியா களப்பணியாளர்களை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2018-19ம் ஆண்டு தினக்கூலி நிர்ணயத்தில் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 296/- என ஒப்பந்த அடிப்படையில், திரு. ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் என்பவர் மூலமாக 26.08.2019 முதல் 30 நாட்களுக்கு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணி ஒப்பந்த காலம் 22.02.2020 உடன் முடிவுறும் நிலையில் உள்ளதால், மேற்படி பணி ஒப்பந்த காலத்தினை மேலும் 30 (23.02.2020 முதல்

22.03.2020 வரை) நாட்களுக்கு ஏற்கனவே ஒப்பந்த பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திரு. ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.19,00,000/- (ரூபாய் பத்தொன்பது லட்சம்)ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.7983/2019/எச்2).

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் பணி மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 1889 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

9. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8009/2016/ஜே-1 நாள் 04.11.2016 மற்றும் 28.06.2017ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரைகள், அரசு தலைமைச் செயலர், சென்னை அவர்களின் அனைத்து துறை கூட்ட அறிக்கை நாள் 14.03.2019, மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.141/2018/அ6 நாள் 05.04.2019 மற்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அரசு முதன்மைச் செயலர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரை நாள் 29.08.2019ன்படி, இம்மாநகராட்சி பகுதிகளில் கொசுவினால் பரவக்கூடிய நோய்களை தடுக்கும் பணிகளுக்கு 48 வார்டுகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 300 வீடுகளுக்கு 1 நபர் என்ற வீதத்தில் (இம்மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகையான 2,07,307க்கு (2011 சென்சஸ்) உட்பட்ட 53,573 குடியிருப்புகளுக்கு) 173 நபர்கள் தேவைப்படுவதால், 173 தற்காலிக மலேரியா களப்பணியாளர்களை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2018-19ம் ஆண்டு தினக்கூலி நிர்ணயத்தில் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 296/- என ஒப்பந்த அடிப்படையில், திரு. ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் என்பவர் மூலமாக 26.08.2019 முதல் 30 நாட்களுக்கு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணி ஒப்பந்த காலம் 22.03.2020 உடன் முடிவுறும் நிலையில் உள்ளதால், மேற்படி பணி ஒப்பந்த காலத்தினை மேலும் 30 (23.03.2020 முதல்

**22.04.2020 வரை) நாட்களுக்கு ஏற்கனவே ஒப்பந்த பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திரு. ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.19,00,000/- (ரூபாய் பத்தொன்பது லட்சம்)ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.7983/2019/எச்2).**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

**1. மாமன்றம் அனுமதிக்கலாம்.**

**2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் பணி மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.**

**<u>தீர்மானம் எண்: 1890 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

**10.** திண்டுக்கல் மாநகராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே மரணமடைந்த திரு.கே.ரவீஸ்வரன் என்பவரின் வாரிசும் மனைவியுமான திருமதி.விஜயராணி என்பவருக்கு ஓய்வூதியம் அனுமதிக்கும் கொடு ஆணையில் அரசாணை எண்.45, நாள் 10.2.2011 ன்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டதில் 1.1.2006 முதல் பணப் பயன் வழங்கப்பட்டிருந்தால் அதனை பிடித்தம் செய்திட வேண்டும் எனவும் 1.2.2011 முதல் வழங்கப்பட்டிருப்பின் பிடித்தம் செய்யப்பட்ட முழுத் தொகையும் தனியருக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. மேற்படி நிலுவைத் தொகையில் தனியரின் இறப்பு மற்றும் ஓய்வு காலப் பணிக் கொடையில் இருந்து ரூ.50,000/- பிடித்தம் செய்து திண்டுக்கல் மாநகராட்சிக்கு Indian Overseas Bank காசோலை வழியாக 19.1.2017 ல் அனுப்பப்பட்டு இத்தொகையானது 22.3.2017 அன்று மாநகராட்சிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியக் கொடுஆணையின்படி நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை என்பதால் தனியரின் வாரிசுதாரர் திருமதி. விஜயராணி என்பவருக்கு அவரின் விண்ணப்பத்தின்படி தொகை ரூ.50000/- வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 13075 / 2019/ பி2)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 1891 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

11. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக் கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வெளி முகமை மூலம் 22 வார்டுகளில் (வார்டுகள் எண்.18, 19, 29, 30, 15, 16, 17, 31, 28, 36, 47, 48, 32, 33, 34, 35) ஆகிய வார்டுகளில் 164 துப்புரவு பணியாளர்கள் எக்செல் நீட் அண்ட் டைடி நிறுவனம், திண்டுக்கல் வாயிலாகவும் மற்றும் வார்டுகள் எண். 41, 42, 43, 44, 45, 46 ஆகிய வார்டுகளில் 62 துப்புரவு பணியாளர்களை பொன் ராமர் லேபர் கான்ட்ராக்டர், மதுரை வாயிலாகவும் ஆக மொத்தம் 226 துப்புரவு பணியாளர்களை அயல் ஒப்பந்த அடிப்படையில் விநியோகம் செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களது செயல்முறை உத்திரவு ந.க.எண்.12148/2016 நாள் 08.06.2014ன் தரவிலைப் பட்டியலின்படி தினக் கூலி ரூ.266/-ம் அதன் பின்னர் ஆகஸ்ட் 2017 முதல் ரூ.279/-ம் மீண்டும் மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறை உத்திரவு ந.க.எண்.13500/2017/எப்5 நாள் 10.10.2018ன் தரவிலைப் பட்டியலின்படி தற்போது வரை நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு தினக் கூலி ரூ.332/- வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி நிறுவனங்களுக்கான பணி ஒப்பந்த காலம் வரும் 20.03.2020 உடன் முடிவடைகிறது.

இந்நிலையில், புதிதாக 278 பணியிடங்களுக்கு வெளி முகமை மூலம் பணியமர்த்திக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7139/2019/ஜே3 நாள் 07.01.2020ன் மூலம் நிவாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, இறுதி செய்யப்படாத நிலையில் உள்ளது.

மேலும், தினக்கூலி துப்புரவு பணியாளர்களின் சார்பாக தொழிலாளர் நீதிமன்றத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் 2019-20ம் நிதியாண்டு தர விலைப்பட்டியலின்படி பரிந்துரைக்கப்பட்ட தினக்கூலி ரூ.509/-ஐ வழங்கிடக் கோரி வழக்கு நடைபெற்று வருகிறது.

மேலும், வெளி முகமை ஒப்பந்த பணிக்காலம் 20.03.2020 உடன் முடிவடைவதாலும், பொது சுகாதார பணிகள் தொய்வில்லாமல் நடைபெற ஏதுவாகவும், ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்டு வரும் வெளி முகமை

நிறுவனங்களான எக்செல் நீட் அண்ட் டைடி நிறுவனம், திண்டுக்கல் மற்றும் பொன் ராமர் லேபர் கான்ட்ராக்டர், மதுரை ஆகிய நிறுவனங்களின் ஒப்பந்த பணி காலத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களால் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட கடித ந.க.எண்.34498/பி3/2015 நாள் 08.06.2016ல் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், தற்போது மாநகரின் பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதியும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.ண்.8698/2019/எப்5 நாள் 27.06.2019ல் கண்டுள்ளபடி துப்புரவு பணியாளர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள 2019-20ம் ஆண்டிற்கான தர விலைப்பட்டியலின்படி தினக் கூலி ரூ.509/- வழங்கிடவும், மேற்படி ஒப்பந்த பணிக் காலத்தினை மேலும் 21.03.2020 முதல் 30.04.2020 வரை கால நீட்டிப்பு செய்து வழங்கிடவும், மேற்கண்ட வகையில் துப்புரவு பணியாளர்களுக்கான ஊதியம், நிர்வாக செலவு மற்றும் ESI & EPF உட்பட ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.57,00,000/-ஐ (ரூபாய் ஐம்பத்தி ஏழு லட்சம் மட்டும்)ஐ இம்மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது (ந.க.எண்.17213/2015/எச்2).

<u>அலுவலக குறிப்பு:</u>

ஏற்கனவே 3 வருட காலத்திற்குள் 4 முறை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவுகளின்படி வெளி முகமை துப்புரவு பணியாளர்களுக்கு தினக் கூலி உயர்வு செய்து வழங்கப்பட்டு வந்துள்ளதாலும், தற்போது பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் வெளி முகமை நிறுவனங்களான எக்செல் நீட் அண்ட் டைடி நிறுவனம், திண்டுக்கல் மற்றும் பொன் ராமர் லேபர் கான்ட்ராக்டர், மதுரை ஆகிய நிறுவனங்களின் ஒப்பந்த பணிக் காலத்தினை மேலும் 21.03.2020 முதல் 30.04.2020 வரை கால நீட்டிப்பு செய்திட மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 1892 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

12. திருமதி. நந்தினி சங்கர் என்பவர் மனை வரன்முறை செய்ய இம்மாநகராட்சி ந.க.எண். 5103/2018/எப்1, கோப்பு மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டது. மனுதாரர் அபிவிருத்திக்கட்டணம் ரூ. 1,04,000/- வரன்முறை கட்டணம் ரூ. 20,800/- அரசு கணக்கு மற்றும் மாநகராட்சி

கணக்கில் செலுத்த தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் திருமதி. நந்தினி சங்கர் என்பவர் அனைத்து கட்டணத்தையும் ரூ. 1,24,800/- ஐ மாநகராட்சி கணக்கில் கடந்த 20.10.2018-ம் தேதி அன்று காசோலை மூலமாக செலுத்தியுள்ளார். மேலும், அரசு கணக்கில் செலுத்த வேண்டிய ரூ. 20,800/- ஐ கடந்த 25.10.2018-ல் ரொக்கமாக செலுத்தியுள்ளார். மாநகராட்சி கணக்கில் கரூர் வைசியா வங்கியில் கூடுதலாக செலுத்திய தொகை ரூ. 20,800/- திரும்ப வழங்க கோரி வரபெற்ற விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.**(ந.க.எண். 1918/2020/எப்1)**

**அலுவலக குறிப்பு..**

மனுதாரர் திருமதி. நந்தினி சங்கர் என்பவர் கூடுதலாக செலுத்திய வரன்முறை கட்டணம் ரூ. 20,800/- திரும்ப வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 1893 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**13.** திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சாமியார் தோட்டம் பகுதியில் உள்ள பி.ஏ.கே. காலனி, வார்டு எண்.6 , நகரளவு எண்கள். 60,61,62 மற்றும் 67/2, -ல் மேற்படி, பூங்கா நிலம் எல்லாவித அபிவிருத்தி பணிகள் செய்யப்பட்டு தற்பொழுது பராமரிக்கப்படாமல் உள்ளது. சாமியார் தோட்டம் குடியிருப்போர் நலபாதுகாப்பு சங்கம், மேற்படி பூங்காவினை அப்பகுதி மக்கள் பயன்படுத்தும் வகையில் பராமரிப்பு செய்து வர அனுமதி கோரியுள்ளார்கள். மேற்படி, பூங்கா மற்றும் சிறுவர்கள் விளையாட்டு திடலை சாமியார் தோட்டம் குடியிருப்போர் நலபாதுகாப்பு சங்கம் மூலம் பராமரித்து வர அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. **(ந.க.எண். /2020/எப்2)**

**அலுவலக குறிப்பு..**

மாநகராட்சி விதிக்கும், நிபந்தனைக்களுக்குட்பட்டு பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டு திடலை பராமரித்து வர அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 1894 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**14.** திண்டுக்கல் மாநகரில் புதிய மருத்துவக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழா 14.3.2020 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்விற்கு பயனாளிகள் செல்வதற்கு ஏதுவாக ஒடுக்கம் சாலையினை பயன்படுத்துவதற்கு அதன் முகப்பு பகுதியில் 80 மீட்டர் நீளத்திற்கு தார் சாலை அமைத்திட, மாவட்ட

ஆட்சித் தலைவர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதால் இச் சாலையினை போக்குவரத்திற்கு உகந்தவாறு தார் சாலையாக மாற்ற தயார் செய்யப்பட்ட ரூ.5.25 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.11658 / 2019 / இ 4)

**<u>அலுவலக குறிப்பு</u>**

வருவாய் நிதி 2019-20 ன் கீழ் பணியினை மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 1895 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

---

**15.** திண்டுக்கல் மாநகராட்சி ஆத்தூர் காமராஜர் நீர்தேக்க வளாகத்தில் இயக்கப்பட்டு வரும் முதல் குடிநீர் திட்டத்தில் உள்ள Unit I 90 HP ல் 300 MS Spindle rod தேய்மானம் அடைந்ததை புதிய ஸ்பிண்டில் ராடு செய்து GM check nut reconditioning செய்து பொருத்தவும், உள்ள Unit II 90 HP மின் மோட்டார் Cable joint செய்யும் Terminal board பழுதடைந்ததை புதிய Backlive Tgerminal Board வாங்கிப் பொருத்தவும், நீர்தேக்க வளாகத்தில் உள்ள ஆய்வு மாளிகையில் உள்ள 1,5 MT AC Gas filling செய்து சர்வீஸ் செய்யவும், 20 mm thick நைலான் கயிறு 20 கிலோ வாங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.23000/-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. **(ந.க.எண்.11658/ 2019/ இ4 )**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும், நகரில் பொது மக்களுக்கு தடையின்றி சீரான கடிநுர் வழங்க வேண்டியதன் அவசியம் கருதியும் மேற்கண்ட பணியையும், அதற்காகும் உத்தேச செலவினத்தையும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொள்வதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 1896 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

---

**16.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 30322 / 2012/ இ 3, நாள் 15.2.2020 ல் எம்ஆர்சி நகர், ராஜா அண்ணாமலைபுரம் , சென்னையில் இயங்கி வரும் தற்போதைய

அலுவலக கட்டிடத்திற்கு 4வது கட்ட பங்களிப்பு தவணைத் தொகையாக ஒவ்வொரு மாநகராட்சிக்கும் தலா ரூ.582860/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி பங்களிப்பு தொகையினை 28.2.2020 க்குள் நகர்ப்புற நிர்வாக சங்க கணக்கிற்கு செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி திண்டுக்கல் மாநகராட்சியின் 4வது கட்ட பங்களிப்புத் தொகை ரூ.582860/- நகர்ப்புற நிர்வாக சங்க கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது . ( ந.க.எண்.1614 / 2020 / இ 4)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**<u>தீர்மானம் எண்: 1897 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

**17.** திண்டுக்கல் மாநகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2017-18 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.47, பாரதிபுரம் ரோட்டில் கழிப்பிடம் கட்டும் பணிக்கு 28.3.2018 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த ஜெகதீஸ்வரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. இப் பணி மேற்கொள்ளப்பட்டபொழுது கூடுதலாக ஈரோப்பியன் டாய்லட் இரண்டு எண்ணமும், பெண்கள் வளாக பகுதியில் Wall மற்றும் SS Hand rail கூடுதலாக பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக மதிப்பீட்டை விட கூடுதலாக ரூ.433196/- கூடுதல் செலவினமாக ஏற்பட்டுள்ளது. இதற்காக தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.1433196/- க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதியும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதம் மற்றும் புதிய விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தினை கருத்தில் கொண்டு இப் பணியினை ஏற்கனவே செய்து வரும் ஜெகதீஸ்வரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் பணியினை ஒப்படைக்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(**ந.க.எண். 7951 / 2014 / இ 4**)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) திருத்திய மதிப்பீட்டிற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி கூடுதல் பணியினை இப் பணியை ஏற்கனவே பார்த்து வரும் ஜெகதீஸ்வரி

கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்திலேயே மேற்கொள்ளலாம்.

3) கூடுதல் செலவினத்தினை மாநகராட்சி வருவாய் நிதி 2019-20 ன் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்: 1898 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**18.** 31.10.2019 அன்று நடைபெற்ற தூய்மை பாரத இயக்கம் 10 வது மாநில உயர் மட்டக் குழுக் கூட்ட நடவடிக்கையில் திண்டுக்கல் மாநகராட்சிப் பகுதியில் சுமார் 10000 சதுரடி பரப்பளவில் திண்டுக்கல் மாநகராட்சி, பழனி, கொடைக்கானல், பல்லடம், கரூர், ஒட்டன்சத்திரம் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் நாள் ஒன்றுக்கு சேகரமாகும் 97 டன் எடையுள்ள விற்பனை செய்ய இயலாத, மக்காத மற்றும் எளிதில் தீப்பிடிக்கக் கூடிய உலர் கழிவுகளை எரியூட்டும் வகையில் 10 டன் திறனுள்ள எரியூட்டும் மையத்தினை ரூ.1.00 கோடி மதிப்பீட்டுத் தொகையில் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி எரியூட்டும் மையத்தினை வேடபட்டி எரிவாயு தகன மேடைக்கு அருகில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் அமைப்பதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. மேலும் இம்மையம் அமைப்பதற்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கும், திட்டப் பிரேரணைகளை நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு முன் மொழிவுகள் அனுப்பவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

( ந.க.எண்.16495 / 2017 / இ 4)

**அலுவலக குறிப்பு**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்: 1899 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**19.** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட 48 வார்டுகளில் உள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளுக்கு குளோரினேசன் செய்வதற்கு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு எண். 15 ன் கீழ் 5 டன் பிளீச்சிங் பவுடர் சப்ளை செய்ய கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளன.

1) ஜெயம் எலக்ட்ரிகல்ஸ் 1 kg - ரூ.38.00
2) ஶ்ரீ மீனாட்சி எண்டபிரைசஸ் 1 kg - ரூ.43.00
3) சூர்யா ஏஜென்சீஸ் 1 kg - ரூ.40.00

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஜெயம் எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(**ந.க.எண். 2966 / 2020/ இ 3)**

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) 5 டன் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/- க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு எண். 15 ன் கீழ் 5 டன் பிளீச்சிங் பவுடர் சப்ளை செய்ய ஜெயம் எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தாருக்கு விநியோக உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 1900 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**20.** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் பகுதிகளில் மழையின் காரணமாக வடிகால்களில் மண் அடைப்பு ஏற்பட்டதால் JCB கொண்டு தூர் வாரி டிராக்டர்கள் மூலம் மண் அகற்றப்படுவதற்கு (பணியாட்கள் கூலி உட்பட ) உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்** | **வார்டு எண்** | **தெருவின் பெயர்** |
|---|---|---|
| 1 | 5 | நந்தவனம் ரோடு, மின் மயான ரோடு |
| 2 | 15 | பிஆர் என் பள்ளி, காந்தி மார்க்கெட் ரோடு |
| 3 | 11 | காமராஜர் நகர் |
| 4 | 43 | மேட்டுப்பட்டி, புனித லூர்தன்னை மகளிர் மேல்நிலைப் பள்ளி எதிர்புறம் |
| 5 | 1 | பிவிகே மஹால் ரோடு |
| 6 | 23 | யானைத் தெப்பம் ரோடு |
| 7 | 47 | சந்தைப் பேட்டை ரோடு |

( ந.க.எண்.11658 / 2019 / இ 4)

**<u>அலுவலக குறிப்பு</u>**

வருவாய் நிதி 2019-20 ன் கீழ் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 1901 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**21.** திண்டுக்கல் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப்பிரிவில் சிப்பம் – I-ற்கு உட்பட்ட கழிவுநீர் உந்து நிலையங்கள், கழிவு நீரேற்று நிலையங்கள், திறவாய் தொட்டிகள், கழிவுநீர் சேகரிக்கும் அமைப்பு ஆகியவற்றிற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் பார்க்கப்பட்டு வருகின்றது. சிப்பம் –Iல் 996 ஆய்வுத் தொட்டிகள் அமைக்கப்பட்டு உள்ளது. சாலை மட்டத்திற்கு கீழ் திறவாய் தொட்டிகள் அமைந்துள்ளதால், அதில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகின்றது. மேலும, வாகனங்கள் அதிகம் செல்லும் பகுதிகளில், திறவாய் தொட்டிகள் சேதமடைகின்றன. இதனை கருத்தில் கொண்டு சேதமடைந்த திறவாய் தொட்டியின் மூடியினை சரிசெய்யவும், சாலை மட்டத்திற்கு கீழ் உள்ள திறவாய் தொட்டியின் மூடியினை உயர்த்தி பொறுத்துவதற்கும் ரூ.10.00 மாமன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**(ந.க.எண். 6831/2020/இ4(பா.ச.தி)**

**அலுவலக குறிப்பு..**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 1902 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---